ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

यान्ति न्यायप्रवृत्तानां तिर्यञ्चोऽपि सहायताम् ।
अपन्थानं तु गच्छन्तं सोदरोऽपि विमुञ्चति ॥

ஸன்மார்க்கத்தில் பிரவேசிப்போர்களுக்கு மிருகங்கள் பக்ஷிகள்கூட ஸஹாயம் புரிகின்றன. கெட்டவழிகளில் செல்வோர்களை அவர்களுடன் பிறந்த தம்பியும் விட்டுவிடுகிறான்.

ஒரு மனிதன் எந்த ஜாதியில் எவ்வித ஆச்ரமத்திலிருந்தாலும் ஸாதுக்களாலும் சாஸ்திரங்களாலும் இகழப்படாத நன்னெறியில் செல்வானாகில் அச்சிறந்தவனுக்கு பரவை விலங்கு முதலானவைகளும் ஸகாயமாயிருந்து அவன் சங்கற்பித்த காரியத்தைப் பூர்த்திசெய்கின்றன. அவ்விதமின்றி சாஸ்திரவிரோதமான மார்க்கத்தில் போகிறவனை எப்பொழுதும் அவன் சுகதுக்கங்களுக்கு பாத்யப்பட்டவனான அவன் ஸகோதரனும் விட்டுவிலகிவிடுகிறான். ஸ்ரீ ராமாயணத்தில் ஸ்ரீ ராகவன் தம் பார்யையை அபகரித்த காமாந்தனான ராவணனை ஸம்ஹாரம் செய்யவேண்டி, இலங்கைக்கருகில் போயிருக்குங்கால் இதையறிந்த ராவணன் தம்பியான விபீஷணன் தன் தமையனிடம் ஸ்ரீ லோகமாதாவான ஸீதாதேவியை ஸ்ரீ தாசரதியின் சரணத்தில் அற்பணம் செய்வதுதான் உசிதம். இல்லாவிட்டால் நம் குடும்பமே அடியோடு போய்விடுமென்று பலவாறு கூறியும், அதைச் செவியுறாத தமையனைச் சத்துருவாக நினைத்து தள்ளிவிட்டு ஸ்ரீராகவன் சத்ருவாய் வந்திருந்தாலும் நியாயமாயிருக்கென்று அவரையே சரணாகதியடைந்து தம்மாலியன்றவரையிலவருக்கு உதவிபுரிந்தார். என்று கூறியிருப்பதையே இதற்கு உதாஹரணமாய்க் கொள்ளலாம் ஆகையால் எல்லாஜனங்களும் எப்பொழுதும் நல்வழிகளிலேயே செல்லவேண்டியதவசியம்.

சித்தூர் ஸம்ஸ்கிருத காலேஜ்.

பாலக்காட்டுச் கருகாமையில் சுமார் பத்துமைல் தூரத்திலுள்ள சித்தூர் என்னும் கிராமத்தில் கிருஷ்ணய்யர் என்கிற ஒரு மஹானால் ஏற்படுத்தப்பட்ட ஸம்ஸ்கிருத காலேஜியின் வருஷாந்தர ரிபோர்ட்டு ஒன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. முற்காலத்திலிருந்த நம்பெரியோர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகையான பயனை யடைவதற்கும், சகல பாஷைகளுக்கும் தாயாகவும், பிறப்பாலேற்படும் ஸம்ஸாரதுக்கத்தை விலக்கவேண்டிய சாதனங்களை நன்கு அறிவிப்பதாயுமிருக்கும். ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களை அபிவிருத்தி செய்வதே நமது தேசத்தவர்களுக்கு மிகவும் க்ஷேமகரமென்று கருதி ஆங்காங்கு பல வித்தியாசாலைகளை ஏற்படுத்தினார்கள். பிரதிப்பிரயோஜனத்தை யெதிர்பாராமல் சிற்சில கிராமங்களிலிருந்த வித்வான்களும் வந்த வித்தியார்த்திகளுக்குப் பாடம் சொல்வதாலும் அந்த வித்தையை மிகவும் அபிவிருத்தி செய்துகொண்டு வந்தனர். மற்றும் சிலர் தம் குடும்பத்தில் சொத்துக்கு பாத்தியமுள்ள வார்ஸுகளிருப்பினும் சிலபாகத்தை அவர்களுக்கு கொடுத்துவிட்டு பாக்கியை ஸம்ஸ்கிருத வித்தையை யபிவிருத்தி செய்வதே பெரிய தர்மமெனக்கருதி அதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இஃதிவ்வாறிருக்க தற்காலத்தில் நவீன நாகரீகத்தில் தேற்சியடைந்த சில புத்திமான்கள், ஸம்ஸ்கிருத வித்தை பிரயோஜனமில்லை யென்றும் அதில், நம்பிள்ளைகளை வீணாய்க் கெடுக்கக்கூடாதென்றும் தீர்மானித்துக்கொண்டு தம்

புத்திரர்களை அந்தப் படிப்பிலிருந்து திருப்புவதோடு மாத்திரமில்லாமல் பிறருக்கும் அது உபயோகமில்லையென்று உபதேசிப்பதற்கு சத்குருக்களாக முன்வந்து விடுகிறார்கள். அந்தோ! இம்மட்டோடு அவர்களிருந்தாலும் அதை நாம் பெரிய உபகாரமாகக் கருதலாம். பின்னும் நம் ஸம்ஸ்கிருதபாஷைக்கு நேர்ந்திருக்கும் துர்தசையை இவ்விதமென்று சொல்வதற்குக் கூட கஷ்டமாயிருக்கிறது. நம் சாஸ்திரங்களுக்குள் தர்மங்களைப் பலவாராகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் அவைகளுக்குள் எது உத்தமமான தர்மமென்று நம்போன்றவர்களுக்கு நன்கறிய முடியாதெனக்கருதி அவர்களே,

सहस्रमेव धेनूनां शतं चानडुहां समम् ।
शतानडुत्समं यानं दशयानसमो हयः ॥
दशवाजिसमा कन्या भूमिदानं च तत्समम् । याज्ञवल्क्ये
भूमिदानात्समं नास्ति विद्यादानं ततोऽधिकम् ॥ बृहस्पतिः
इमां पृथ्वीं च यो दद्यात् सर्वरत्नोपशोभिताम् ।
दद्याच्छास्त्रं च विप्राणां तच्च तानि च तत्समम् ॥ इति यमः ।

பசு, காளை, வாஹனம், அச்வம், கந்யகை இவைகளின் தானத்தையே மேன்மேலும் சிறந்ததாகக்கூறி, பூதானமும் கன்யாதானமும் சமமென்றுரைத்து பூமிதானத்திற்குமேல் சிறந்தது கிடையாது என்றுகூறி முடிவில் வித்தியாதானம் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தகென்று பிரஹஸ்பதியும் இந்த பூமியை சகல ரத்தினங்களுடன்கூட ஒருவன் தானம் செய்தாலவனுக்கு எவ்வளவு புண்ணியமேற்படுமோ அவ்விதமே அந்தணர்களுக்கு சாஸ்திரதானம் செய்கிறவர்களுக்கு முண்டென்று இயமன் கூறுகின்றார். இவ்விதமின்னும் பலர் சொல்லியுள்ளார். இவ்விதம் வித்தியாதானத்தையே மிகச்சிறந்ததாகப் போற்றும் சாஸ்திரங்களைப் பிரமாணமாகநம்பி இந்த தானத்தைச்செய்து இவ்வுலகிலும் பரலோகத்திலும் விசேஷமான சிரேயஸ்ஸை

அடையவேண்டுமென்று, மிகவும் சிரமப்பட்டுத் தேடியபொருளைத் தம்மக்கள், பந்துக்கள் முதலானவர்களைக்கூடப் பெரிதாய் எண்ணாமல் ஸம்ஸ்கிருத வித்தியாசாலைக்கென்று ஏற்படுத்தி, தாமுள்ளவரையில் நன்கு நடைபெறச்செய்து இவ்விதமே தம் காலத்திற்குப்பிறகும் நடைபெறவேண்டுமென்று அதற்குவேண்டிய நியமங்களை ரிகார்டுமூலமாய் நன்கு ஏற்படுத்திவிட்டு அவர்கள் மறைந்ததும், அந்த தர்மத்தைப் பாதுகாப்பதற்காக வந்திருக்கிறோமென்று வெளிக்கு வேடம்பூண்டு அதை சரியாய் நடத்தாமல், இதற்குச் சரியான கணக்குவேண்டுமென்று மேல் அதிகாரிகள் கேட்டால் பொய்யான கணக்குகளைத் தயார் செய்து அவர்களிடம் காண்பிவித்து, அவர்கள் அதினின்றும் அவநம்பிக்கை கொள்வார்களேயாயின், அவர்களுக்கு ஸ்வர்ண புஷ்பம் சமர்ப்பித்து, தர்மசொத்தின் வரும்படியை வைத்துக் கொண்டு தம்மக்களுக்கு ஆடையும் பெண்டீருக்கு நகையும் குடும்பச்சிலவுக்கும் உபயோகப்படுத்தி மூலபுருஷனுடைய அபிப்பிராயத்திற்கு நேர்மாறுதலாக நன்கு தர்மபரிபாலனம் செய்துகொண்டு வருகிறார்கள். மற்றும் சில மேதாவிகள் இது சரியான தர்மமில்லையெனவும் இதை அடியோடு நிறுத்தவேண்டுமென்றும் வெகு சிரமப்பட்டு தம்கையிலிருந்து 400 அல்லது 500 ரூபாய்களைச் செலவுசெய்து இதை நிறுத்தி இந்த சொத்தைக்கொண்டு பெண்பாடசாலை போடவேண்டுமென்றும், ஆஸ்பத்திரி கட்டவேண்டுமென்றும், கைத்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், தம் புத்திக்குத்தோன்றியவாறு பல விதமாய்ச்சொல்லி நடந்துவந்த தர்மத்தை நிருத்திவிடுகிறார்கள். வித்யாபிவிருத்தியின் பொருட்டு உபயோகப்படவேண்டுமென்று மூலபுருஷனால் ஏற்படுத்தப்பட்ட தர்மத்தை அவர் கொள்கைக்கு விரோதமாய் நாம் மாற்றுவது சரியா, தவறா என்று கொஞ்சமேனும் ஆலோசிக்கிறதில்லை. இந்த தர்மத்தைக் காட்டிலும் மற்றொன்று சிறந்ததாகத் தோன்றினால் தாம் சம்பாதித்த பொருளை அதற்காக ஏற்படுத்தி அதை விருத்திசெய்தால் நன்றாயிருக்கும். அவ்வித யோசனையே ஏற்படுகிறதில்லை. பிறராலேற்படுத்தப்பட்ட தர்மம் சரியல்லவென்று அதை மாற்

றுவதற்காக மஹாமேதாவிகளாகத் தங்களை நினைத்துக்கொண்டு பலர் முன்வருகின்றனர். கலியின் அாசாக்ஷியால் நம் ஸம்ஸ்கிருதபாஷைக்கு நேர்ந்த கஷ்டத்தைக் கண்ணுற்ற ஆஸ்திக திலகரான கிருஷ்ணய்யர் என்கிற இம்மஹான், எப்படியாவது நம்மாலியன்றவரையில் ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களை விருத்தி செய்யவேண்டுமெனக்கருதி பிறருடைய சகாயத்தையும் அபிப்பிராயத்தையும் அற்பமேனும் எதிர்பாராமல் பகவானால் தமக்கு இயற்கையில் புண்ணியத்தின்பயனாய் யேற்படுத்தியிருக்கும் தைர்யத்தையும், தனத்தையும், புத்திசக்தியையும் மாத்திரம் துணையாகக்கொண்டு சுமார் 30 வருஷகாலத்திற்குமுன் ஸம்ஸ்கிருத காலேஜை சித்தூரில் ஸ்தாபிததார். அதில் வாசிக்கும் மாணுக்கர்களுக்கு அவர்கள் செய்திருக்கும் சௌகரியங்களைப் போல் வேறு எவ்விடத்திலும் கிடையாது. தம் தாய்தந்தைகள் வந்து அழைத்தாலும் அப்பிள்ளைகள் அதைவிட்டுப் போகாது. இதிலிருந்தும அங்கு நடக்கும் ஸௌகரியங்களைத் தெரிந்துகொள்ளலாம். பின்னும் அந்த மாணுக்கர்களை தம் புத்திரர்களாகப் பாவித்து, இரவும் பகலும் படிக்குங்காலங்களிலும், சிந்திக்கும் காலங்களிலும், போஜனம் செய்யுங்காலங்களிலும் தாம் நேரில்போய் நன்கு கவனித்து ஒவ்வொருநாளும் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை செய்கிறுர்கள். பின்னும் அந்த காலேஜின் வருஷாந்தரக் கணக்குகளை ஒருவர் கேட்கவும் தாம் பதில் கூறவும் அவசியமில்லாவிட்டாலும் தம்மை அதற்கு தர்ம கர்த்தாவாகவும் வேறு பாத்தியம் தனக்கு இல்லாததாகவும், இதின் வரவுசெலவு கணக்கைப் பிறருக்குச்சரியாய் நாம் ஒப்புவிக்க வேண்டுமென்கிற தீர்மானமான எண்ணங்கொண்டு ஒவ்வொரு வருஷமும் வரவு செலவு விபரங்களுக்கு ரிபோர்ட்டும் அச்சிட்டு அனுப்புகிறுர்கள். பிறரால் வித்தியாபிவிருத்திக்கு என்று வைக்கப்பட்ட பொருளை, தம் தகப்பன் தேடித்தங்கள் குடும்பத்தின் செலவிற்கு வைத்ததாக நினைத்து, மனுஷ்யசரீர மிது, மாணமுண்டு, பாபத்திற்கு சிக்ஷையும் நிச்சயமாயேற்படுமென்கிற எண்ணம் கொஞ்சங்கூடயில்லாமல் கள்ளக்கணக்கு எழுதி தர்மசொத்தைப் பிடுங்கித்தின்னும் பேய்களுக்கு இம்

மஹானைப் பார்த்தும் புத்திவரவில்லையே. ஐயோ! பாபம். சிறந்த மானிடஜன்மாவை எடுத்தும் இவ்வித கெட்டபுத்தியா வரவேண்டும். இந்த பாபிகளுக்குப் புத்திசொல்லுமாறு ஸ்ரீ பகவான் இந்த கிருஷ்ணய்யர் என்கிற ஓர் தர்மபிரபுவை சிருஷ்டித்து இவ்விதம் தர்மகாரியத்தை நடத்தவேண்டுமென்றும் அவர் மூலமாய்க்காண்பிக்கிறுர். அப்படி ஸ்பஷ்டமாய்க்காண்பித்தும் அதை ஒருவரும் கவனிப்பாரில்லை தற்காலம் நம் தேசத்தில் இந்த ஸம்ஸ்கிருத வித்தையை சாஸ்திரவிரோதமில்லாமல் நன்கு விருத்திசெய்கிறவர் இம்மஹான் ஒருவரே. இவரால்தான் நம் ஸனுதனவித்யா கல்பவிருக்ஷமானது பாதுகாக்கப்பட்டு நன்கு பயிராகின்றது. இம்மஹான் நீடூழிகாலம் சிரஞ்சீவியாயிருந்து வித்யா கல்பலதையை லோகமெங்கும் தளிர்த்து படரும்படிசெய்து விசேஷமான சிரேயஸ்ஸை யடையும்படி ஸர்வஜகத்திற்கும் ஈசனுன ஸ்ரீ பரமேசுவரன் அனுக்கிரஹம் செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேம். சுபம்.

தர்மம்.

(கஉ அ-வது பக்கத்தொடர்ச்சி).

இதனுல் காமஸூத்திரம் எழுதுகிற வாத்ஸ்யாயனர் தர்மத்தை எவ்வளவு புகழ்ந்து கூறுகின்றனர் பாருங்கள். ஆனுல் இப்படியெல்லாம் தர்மம் அதர்மமென்று மனுகாலம் முதற்கொண்டுதான் வகுக்கப்பட்டதென்றும் அதற்கு முன்காலத்தில் இப்படிப்பட்ட பாகுபாடில்லை யென்றும் நினைத்துவிடக்கூடாது. ஐயோ! பாபம். ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் ஒன்றுமறியாத பாலகர்களை வைத்துக்கொண்டு இந்துதேச சரித்திரமென்று ஒரு பாடபுத்தகத்தைக் கற்பித்துக்கொண்டிருக்கிற ஒரு உபாத்தியாயர் பக்கத்தில் நானிருக்க நேர்ந்தகாலத்தில் அவர் பிள்ளைகளுக்கு அசோகன்புத்தர் காலத்தில் இம்மாதிரி

வர்ணசிரம தர்மநியமம் கிடையாதென்றும் எல்லோரும் ஸம ரஸமாய்த் தொழில்களால் மட்டும் மேற்கீழ் வித்தியாஸத்தை அடைந்திருந்தார்களென்றும் பிறகு மனுவின் காலத்தில்தான் இப்படிப்பட்ட வித்தியாஸங்களேற்பட்டன வென்றும் கதறிக் கொண்டிருந்ததைக் கேட்டு சிவ சிவாவென்று என்வகுப்பு மாணுக்கர்களிடம் அதைப்பற்றி உண்மையை விவரித்துக் கொண்டிருந்தேன். இப்படியே படித்துவரும் மாணுக்கர்களின் மனது முற்றிப்போன பிறகு நம்மால் இவர்களைத் திருத்தமுடியுமா? ஆர்யர்களே! இப்படியே போய்க்கொண்டு இருந்தால் நமது தேசமும் மதமும் நாமும் என்றைக்கு முன்னுக்குவரப் போகிறோம். புத்தருக்கு பின்னுலா மனுவந்தார்? இல்லை இல்லை. அதற்கும் எவ்வளவோ காலத்திற்கு முன்வந்தவர். சூர்ய வம் சத்தில் முதலில் அவதரித்தவர் அவருக்குப்பிறகு எத்தனை யோ தலைமுறைக்குப் பிறகு ஸ்ரீராமர் அவ்வம்சத்தில் அவதரித் தார். ஸ்ரீராமனது காலம் திரேதாயுகம் ஸ்ரீராமனது காலத்தை நிர்ணயம் செய்துகொண்டு பிறது அவருக்கு முன்னுல் எத்தனை தலைமுறைக்கு முன்னுல் அவர் இருந்தார் என்றும் அவருக்குப் பின்னிருந்தவர்கள் எத்தனை வயதிருந்தார்களென்றும் கணக் கிட்டுக்கொண்டு அவரிருந்த காலத்தை ஒருவிதமாய் நமது புத்திசாலிகள் பார்த்துவிடுவார்களென்று நினைக்கிறேன். ஆனுல் அப்புத்திசாலிகளுக்கு என்னுலான கணக்கைக்கொடுக்கிறேன். அதைக்கொண்டு மற்ற ராஜாக்களின் வயதைக் கணக்குப்பார்க் கட்டும். தசரதமகாராஜா 60000 வருடம் இருந்ததாகவும் ஸ்ரீராமர் 11000 வருடம் இருந்ததாகவும் ராமாயணமூலமாய்த் தெரிகிறது. மற்ற அரசர்களது பெயரும் வயதும் எங்கேயா வது ஆபீஸில் இருக்கிற ரிகார்டுமூலம் எடுத்துவிடுவார்கள். ஆனுல் புத்தருடைய காலம் இன்றைக்கு சுமார் 4000 வருடங் களுக்குள்தான் என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

இனி இவ்வீண்வாதம் வேண்டாம். மனு நேற்றைய மனி தரல்ல. அவருக்கு ராகத்வேஷம் கிடையாது. பிர்மாவால் சிருஷ்டிக்கப்பட்டவர், அவருக்குப்பிறகுதான் அவரிடமிருந்து

மனிதர்கள் பிறந்தனர். அதனால்தான் நமக்கு **मानवः** என்று பெயர். இதைப்பற்றி நான் சிருஷ்டிக்கிரமம் என்ற உபன்யாஸத்தில் விஸ்தரித்துக் கூறியுள்ளேன். இத்தகைய மனுவும் தன் சொந்த புத்தியால் ஒரு புத்தகத்தை எழுதிவிடவில்லை. அவர் அனுதிஸித்தமான வேதத்தைத்தழுவி என்றும் சாசுவதமான தர்மத்தைத்தான் சொன்னார். இவ்வபிப்பிராயத்தை வாத்ஸ்யாயனரே முதல் அத்பாயம் ஆரம்பத்திலேயே லோகத்தின் ஸ்திதிக்காக லக்ஷம் அத்யாயத்தோடு சொன்ன சாஸ்திரத்திலிருந்து தர்மசாஸ்திரத்தை வேறாகப் பிரித்தார் என்று சொல்லியிருப்பதாய் முன்னம் கூறியிருக்கின்றேன். இனிப் பிரகிருதத்தைத் தொடர்வேன். இத்தர்மம் இன்னரூபம்தானென்பதில்லை. லோகதர்மம், புருஷதர்பம், ஸ்திரீதர்மம், மனுஷ்யதர்மம், தேவதர்மம், தேவஸ்தானதர்மம், ராஜதர்மம், குலதர்மம் என்று கணக்கில்லாமலிருந்தாலும் ஸ்ரீமத் பகவத்பாதாசார்யாள் கீதாபாஷ்பத்தின் ஆரம்பத்தில், பிரவிருத்திலக்ஷணம் நிவிருத்திலக்ஷணம் என்று தர்மம் இருவகைப்படும். பகவான் முதலில் மரீசி முதலியவர்களை சிருஷ்டித்து பிரவிருத்திலக்ஷண தர்மத்தையும் ஸனகர் முதலியவர்களை சிருஷ்டித்து நிவிருத்திலக்ஷண தர்மததையும் அனுஷ்டிக்கும்படி செய்தார். இந்த இரண்டு தர்மம்தான் உலகத்தின் ஸ்திதிக்குக்காரணம். பிராணிகளுக்கு ஸாக்ஷாத்தாய் அப்யுதயத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணம் எதுவோ அத்தகைய தர்மம் பிராமணன் முதலிய வர்ணத்தவர்களாலும் பிர்மசாரி முதலிய ஆசிரமத்தவர்களாலும் சிரேயஸ்ஸை விருப்புகிறவர்களால் வெகுகாலமாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்றார். இதனால் பிரவிருத்திலக்ஷண தர்மத்தை அனுஷ்டித்தால்தான் உலகம் ஸ்திரமாய் மென்மேலும் முன்வருமென்றும் நிவிருத்திலக்ஷண தர்மம் கேவலம் உலகை வெறுத்த ஞானிகளுக்குமென்றேற்பட்டது. இதனாலும் இக்காலத்திற்குமல்ல மற்று எக்காலத்திலும் உலகத்தை முன்னுக்குக்கொண்டுவர வேண்டுமென்றால் தர்மம் ஒன்றுதானென்று ஏற்பட்டது.

(இன்னும் வரும்)

எம். ஏன். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

முனையடுவார் நாயனர் சரிதம்.

கடல்புடை சூழ்ந்த இப்பெரும்பூமியின்கண் திருவளர்ந் தோங்கும் பரதகண்டத்துள் எவற்றிற்கும் முதல்வராயுள்ளோ ரின் பெரிய தவத்தையுடைய அகத்திய முனிவரது கமண்ட லத்தினின்றும் வெளிப்பட்டுப் பூமிதேவியின் மார்பிற்றங்கிய நித்தில மாலையையொத்தக் காவேரியாற்ருற் சூழப்பெற்று பல வளங்களும் நிறைந்துள்ளமா சோழநாட்டில் வேயுறுதோளியம் மை சமேத ஸ்ரீ அருட்சோமநாத ஈசுவரர் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் புண்ணிய க்ஷேத்திரமாகிய "திருநீடு ரிலே" மண்மிகுந்தோங்கும் வேளாளர் குலத்தில் விண்ணுல குளோர் முதல் மண்ணுலகுளோர் யாவர்களும் போற்றிப் புகழ்ந்து பூமாரிபொழிய புரட்டாசி-ஸ்ரீ மகநக்ஷத்திரங்கூடிய சுபசோபன முகூர்த்தத்திலே ஸ்ரீ முனையடுவார்நாயனர் சுவாமி கள் திருவவதாரம் செய்திருந்தனர்.

அவர் தாய், தந்தை, புரியும் கர்மங்களாகிய ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், வித்யாரம்பம், உப நயனமாகிய உபதேசம் இவைகள் முடிந்து பிரமச்சாரியாகி தண்டம், கமண்டலம், தற்பமுடி, மௌஞ்சி, அரைஞாண் இவை களைத் தரித்து பிக்ஷான்னம் புசித்தல் தேவார திருவாசக வேதாத்யயனம் செய்தல் குருவின் வீட்டில் வசித்தல் குரு வுக்கு சிச்ருஷை செய்தல் உபதேசம் பெறல் முதலான விரதங் களையும் முறையே யனுஷ்டித்துக் குருவின் உத்தரவேற்றுத் தமது குலாசாரத்துக்குத் தக்கதாயும் பெண்களுக்கு உரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்புடைத்துள்ள குணபூவையை மணந்து கிரஹஸ்தாசிரமம் பெற்று விகிதகர்மங்களாகிய நித்ய நைமித்திக காமிய பிராயச்சித்தங்களை நித்தியானந்த மோக்ஷ சாம்பிராச்சியத்தைக் கொடுக்கும் நிஷ்காமமாக யாவைகளையும் வழுவுறு நன்குவிளங்க நடத்தி அளவிலாப் புண்ணிய பேரின்ப வெள்ளத்துளாழ்ந்து திக்கெல்லாம் புகழ்ந்தேத்தப் பெருமை

வாய்ந்த பெரியவரென்னுந் திருப்பெயர் பெற்று, ஆதி, அந்தம், உருவம், அருவம், குணம், குறி முதலியவைகளிலாதெங்கும் நிறைந்து மனம் வாக்குக்கெட்டாது உயிருக்குயிராயிருப்பது போன்ற அளவிறந்த தன்மைகளையுடைய பரிபூரணமான ஒப்பற்ற நிஷ்களப் பொருளாயிருக்கிற சிவபிரானின் திருவடிக்கு அர்ச்சித்துத் துதித்தன்பு (உடையவர் பூஜை) பூண்டொழுகி சிவாகமவிதிப்படி,

"உச்சியே நெற்றிகண்ட முடம்பரைகால் கைபின்னர்
மெச்சிவெண் ணீறுமூன்று விரல்திடச் சாத்திநின்று
நச்சியும் நயனமாலைநங் கையோர்புவித் தோனவ்வி
யிச்சையாம் பரசுயானைத் தோலுமங் கிருக்குமன்றே"

எனச் சிவபுராணங்கள் கூறியவாறு திருநீற்றைச் சகல வினையையுந்தீர்க்கும் மருந்தென்று உண்மையாகத்தியானித்து அன்புடன் உச்சி, நெற்றி, கழுத்து, உடம்பிற்பாதியான இடுப்பு, கால், கை முதலிய மற்ற ஸ்தானங்களிலும் முறைமைப்படி மூன்றுவிரல் பொருந்தத்தரித்து,

"உருத்திரன்விழித் துளிகளேயுருத் திராக்கந்
திருத்திரவிசந்திரன் றிருந்துகனற்கண் ணி
லருத்தமிகுபேதமிரண் டாறுபதிறுை
பொருத்தொருபதென்பர் நிறம்போன் றவளங்காரே"

எனச் சொல்லுகின்ற உருத்திராக்ஷ மணிகளில் சிவாகமவிதிப்படி ஒரு முகம்முதல் பதின்மூன்று முகம் ஈறாகவுள்ள மணிகளை முறையே

"மிக்கபதின் மூன்றினுக்குமே லுமுகமில்லை
தக்கதலையொன்று தலைமாலையுநாலென்பார்
நக்கலையிரட்டிகள்மாங்குறநூற்றெட்டாங்
கைக்கணிகள்பன்னிருவர்காணகலமைப்பான்"

எனச்சொல்லும் உயர்வாகிய பதின்மூன்று முகமுள்ள மணிக

ளுக்கு மேற்பட்ட மணிகளில்லை என்றபடி அம்மணிகளைத் தகுதி யாகிய சிகையினிடத்தில் ஒருமணியும், சிரமாலை முப்பத்தாறு மணியும், கழுத்திற்கு எழுபத்திரண்டுமணியும் மார்பிற்கு நூற் றெட்டுமணியும், கைகளுக்குப் பன்னிரண்டுமணியும், வாகுவணி ஐம்பதுமணியும் அணிந்து சிவபிரானை வேதாகமவிதிப்படி பய பக்தியுடன் பணிந்து இல்லறத்தை ஒழுங்காகநடத்திச் சிவனடி யாரைச் சிவமெனச் சிந்தையுட்கருதி அதிதீவிரபராக்கிரமசாலி யாய் மண்டலம் எண்டிசை மன்னர்கள் புகழ்ந்தேத்த நன்கு வாழ்ந்திருந்தார். இவரிடம், சத்ருக்களுடைய போர்முனையிலே தோற்ற இராஜாக்கள்வந்து முறையிட்டு இராஜ்யத்தை மீட்டுக் கொடுக்கக் கூலிபேசினால் விதிப்படி அணிந்த விபூதி உருத்ரா க்ஷத்தோடுள்ள பூரித்தபுயமும் நீதிசாஸ்திர நெறிமுறைப்பயன் றெரிந்த சொற்பொரு நயமும் விற்பனமும் விளங்கிய சௌந் தரியமும் கூர்வேல்தாங்கும் நியமமுமுடைய முனையடுவார் நாயனார் சுவாமி அவ்வரசர்களுக்காகப் பரிந்துபோய் நடுவுநிலை வைத்துக் கூற்றுமொதுங்கப் போர்செய்து வெற்றிக்கொடி நாட்டி வென்று பொருள் சம்பாதித்துச் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டுசெய்துத் திருவமுது அறுசுவையுடனளித்து அவர்கள் வேண்டியமட்டுந் திரவியங்களைக் குறிப்பறிந்து நிறம் பக்கொடுத்துச் செல்வவந்தராய்ச் செழித்தோங்கி நன்குவாய்த் திருந்ததினுலிவருக்கு முனையடுவார் நாயனார் என்னும் திருநாம முண்டாயிற்று. இவர் நெடுங்காலம் இந்த அருமையாகியதிருத் தொண்டைச் செய்துகொண்டிருந்து பங்குனிமீ பூசநக்ஷத்தி ரத்திலே கருணைப்பெருங்கடலையுடைய சிவபெருமான் இவரின் பக்தி வைராக்கிய சித்தத்தை யுலகோர்க்கறிவிக்க தோல்வி யுற்ற அரசனைப்போல் தோன்றித் தனது ராஜ்யத்தை மீட்டுக் கொடுக்க இவரிடம் வேண்டிடவே அதற்கிசைந்த இவர் அவர் பின்சென்று ஆரண்யத்தில் கூடியிருந்த மஹா பயங்கரமாயுள்ள மாற்றுன்படைகளை யவ்வுத்தகளத்தைவிட்டு விரட்டியடித்துத் தம்மை யழைத்துவந்து தம்முடன் யுத்தகளத்தில் நின்ற அரச னைத் திடீரென்று காணாததால் தேடித்திகைத்து நிற்கவே, பக

வான் ரிஷபவாகனரூடராய்க் காக்ஷியீய, மாற்றுன்படைகளாய் வந்திருந்த தேவகணங்களெல்லாம் மங்கள ஆசிகூறி, மலர்மாரி பொழிய, சிவலோகத்தையடைந்து பேரின்பத்தை யனுபவித்துக்கொண்டு சிவத்தொண்டர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராய் நன்கு வாழ்ந்திருக்கின்றனர்.

வ. சி. நா. சிதம்பரம்பிள்ளை.

ஸ்ரீ ராமவிஜயம்.

(கஉக-வது பக்கத்தொடர்ச்சி.)

இந்த சமாசாரங்கள் ராவணனுக்கு எட்டியது. அவனால் அனுப்பப்பட்டு ஆயுதபாணிகளாய் 8000 ராக்ஷஸர்கள் அனுமானைவந்து எதிர்த்தார்கள். வாருங்கள், வாருங்கள் யென்று எதிர்கொண்டுபோய் அனுமான் சில மரங்களை அவர்களின்மீது விட்டெறிந்தார். போனவர்போக மற்றவர்கள் அறண்டோடினார்கள். உடனே அங்கிருந்த ஓர் உயர்ந்தமாடத்தைத் தவிடுபொடியாக்கினார். மந்திரி குமாரனான ஜம்புமாலி என்பவன் அநேகம் ராக்ஷஸர்களுடன் இவரைத் தகர்ந்தான். அவர்களையும் ஒரு நொடியில்வென்று ஒரு கோபுரத்தின்மேல் ஏறிநின்று என் ராமன் கிருபையால் ஜயத்திற்கு என்ன குறைவு. இனி யாராவது யுத்தத்திற்கு வருகிறீர்களாவென்று அட்டஹாஸம் செய்தார். விரூபாக்ஷன், யூபாக்ஷன், தூர்த்தரன், பிரஹஸன், பாஸகர்ணன் என்ற 5 சேனாதிபதிகள் திரண்ட சேனைகளுடன் வந்தார்கள். அனுமானுடைய பராக்கிரமத்தை இவர்களிடம் காட்டி இவர்களையெல்லாம் தொலைக்க அதிகநேரம் செல்லவில்லை.

இதைக்கேட்ட ராவணனுக்கு அளவற்ற கோபம்வந்தது. கண்களிற் தீப்பறந்தன. சபையை தெறிக்கப் பார்த்தான். இவனது குமாரனான அக்ஷன் இதோ ஒருநொடியில் அக்குரங்

கைப் பிடித்துக் கட்டிவருகிறேன் என்று வீரம்பேசிக்கொண்டு ரதகஜாதிகளுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டான். கிரீம் கிரீம் என்று சப்தித்துக்கொண்டு ரதங்கள் வரிசை வரிசையாய் வந்தன. கணகணவென்று மணியோசையுடன் கஜங்கள் பீட்காரத்துடன் ஒடிவந்தன. வாயுவேகத்தையும் திக்கரித்துக்கொண்டு குதிரைகள் குதித்துவந்தன. அனுமான் கொஞ்சமும் கலங்கவில்லை. அக்ஷகுமாரன் வில்லைப்பிடித்து தீக்ஷண்யமான பாணங்கள்பூட்டி அனுமான்பேரில் விட்டான். அதே சமயத்தில் சூலாயுதங்களையும் மற்ற ராக்ஷஸர்கள் அவர்மீது எறிந்தார்கள். ஆகாயமுழுதும் பாணங்களால் நிறைந்தன. ஹனுமான் பேஷ்! இப்பொழுதுதான் நல்லயுத்தம் கிடைத்தது. ஆனாலும் இந்த பாணங்களில் வீரியமில்லை, வேகமாயும் அவைகள் போடப்படவில்லை என்று ஒருதடவை தேகத்தை சிலிர்த்துக்கொண்டார். ஆயுதங்களெல்லாம் தவிடுபொடியாய்க் கீழேவிழுந்தன. ஹனுமான் கையினாலும், விருக்ஷங்களினாலும் அடிபட்டு ரதங்கள் உடைந்தன. கஜங்கள் கிழிந்தன. குதிரைகள ரத்தத்தைப் பெருக்கவிட்டுப் படுத்தன. கால்வேறு, கைவேறு, உடல்வேறாய் கண்டதுண்டமாக ராக்ஷஸவீரர்கள் வீழ்ந்தார்கள். அக்ஷனுக்கும் அனுமானுக்கும் வெகுநேரம் மல்லயுத்தம் நடந்தது. அவன் அவரைக்கட்ட, இவர் அவனைமுட்ட, அவன் பிடிக்க, இவர் அடிக்க, அவர் உருட்ட, இவன் பிறட்ட இப்படிச் சில நேரம் சென்றதும், "இவன் பலசாலிதான் வரவர வலுக்கின்றான். எனக்கும் அலுப்பாயிருக்கிறது. இவனை இப்பொழுதே முடித்துவிடுகிறேன்" என்று அனுமான் அவனை இருகைகளாலும் பிடித்து அந்தரத்தில் சுழற்றி ஓர் பாறையில் மோதினார். இனி இந்த உலகத்தாரின் ஜோலிக்கு வருவதில்லை யென்று அக்ஷன் தக்ஷணத்தில் க்ஷீணனானான். அனுமான் மறுபடி கோபுரமேறி இவ்வளவுபேர்தானா? இன்னும் பாக்கியுண்டா? என்னால் கிராக்கியில்லை யென்று கொந்தளித்தார்.

அனுமாருடைய விக்கிரமங்களைக் கேட்டு பெருந்திகில் பிடித்த ராவணன் இந்திரஜித் என்னும் மகாவீரனான தனது குமாரனை யழைத்து வாராய், மேகநாதா உன்னுடைய ஸாமர்த்

தியத்தைக்காட்ட இதுவே சமயம். நமது நகரத்தில் ஒரு துஷ்டக்குரங்கு வந்து கொட்டமடிக்கிறது. அதன் பராக்கிரமத்தைப் பார்த்தால் வானரனாகத்தோன்றவில்லை. நம்மைச் சேர்ந்த ஸைன்யங்கள் அதனால் விசேஷமாய் அடிபட்டுப்போனதுமன்றி உனது ஸகோதரனான அக்ஷனும் அதன் கோபத்திற்கு இரையானான். பிரும்மாவினிடத்திலிருந்து அவரது அஸ்திரத்தை பெற்றவனும் இந்திராதிதேவர்களைக் கதறக்கதற அடித்தவனுமான நீதான் அவனை அடக்கவேணும் யென்று சொல்ல, இந்திரஜித் அப்படியே செய்கிறேன் என்று பிதாவை வணங்கி யுத்தரங்கம் வந்தான். அவன் வருவதைப் பார்த்து தேவர்களும் நடுங்கினார்கள். அவன் ஸமீபத்தில் வந்ததும் அனுமான் அட்டஹாஸம் செய்து கர்ஜித்தார். இந்திரஜித் தனது தனுஸில் நாளீகம் நாராசம் முதலான பாணங்களைப் பூட்டி நாலு திக்குகளிலும் ரதத்துடன் சென்று அனுமானைச் சல்லடைக் கண்ணாய்த் துளைத்தான். அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் அனுமான் ஒரே பாய்ச்சலாய் அவன் ரதத்தின் மீதேறி அவனை இறுகக்கட்டினார். வெகுநேரம் அவருடன் யுத்தம்செய்து தன்னை விடுவித்துக்கொண்டு ராக்ஷஸன் ஆகாச மார்க்கத்தில் நின்று தனக்குத்தெரிந்த அஸ்திரங்களை எல்லாம் அவர்மீது விடுத்தான். அனுமான் ஒன்றுக்கும் அசையவில்லை. வேறொன்றாலும் இவ்வானரனை ஜயிக்கமுடியாதென்று தெரிந்து கொண்ட அவ்வரக்கன் பிர்மாஸ்தரத்தினால் அவரைக்கட்டினான். அனுமான் பூமியில் நிச்சேஷ்டராய் விழுந்தார். பிர்மாஸ்திரத்தினால் கட்டினான் என்ற விஷயத்தை உணர்ந்தார். அக்கடவுளை தியானித்தார். சில ராக்ஷஸர்கள் கட்டைபோல் கிடக்கும் இவரிடம் தைரியமாய் வந்து கயறுகளாலும் துணிகளாலும் இவரைக்கட்டினார்கள். வேறு கட்டுகளை ஸகிக்காத பிர்மாஸ்திரமானது இவரை விட்டுவிட்டது. அப்படி விட்டுவிட்டதை இவர் அறியாதவர்போலிருந்தார். ராவணன் ஸபையில் விட்டார்கள். ராவணன் மகாகோபத்துடன் என் இப்படி இது துஷ்டத்தனம் செய்கின்றது என்று கேட்கும்படி மந்திரிகளை ஏவினான். அனுமார் கண்கள் சிவக்க அவனை ஒரு பார்வை

பார்த்தார். ராவணனுடைய அழகையும், ஆண்மையையும், ஆடம்பரத்தையும் பார்த்து வியந்தார். ராவணன் கைலாஸத்தில் என்னை சபித்த நந்திபகவான் இந்த ரூபம்கொண்டு வந்திருக்கிறரோ அல்லது இவன் வானரசூரனோ என்று மனதில் சங்கித்தான். உடனே ராவணனது மந்திரியான பிரஹஸ்தன் வானர, நீ யார்? இந்திரன் உன்னை அனுப்பினனு? எங்கிருந்து எதற்காகவந்தாய்? பயப்படாமல் சொல். உண்மையைச்சொன்னால் விட்டுவிடுவோம் என்று கேட்டான். அனுமார் நான் ஒருவருடைய தூதனுமில்லை. இந்திரன் முதலானவர்களால் எனக்கு என்ன ஆகவேண்டும், நான் வானரனே, மகாராஜாவைப் பார்க்கவேண்டுமென்று கொஞ்சம் விளையாடினேன். என்னை அடித்தவர்களை நான் கொன்றேன். அஸ்திரங்களால் என்னைக் கட்டுவது என்பது ஸ்வப்பனத்திலும் நடவாதகாரியம். நான் ராகவனுடைய தூதன். சுக்ரீவன் இவ்விடத்தில் ஒரு காரியமாய் என்னையனுப்பினர். அவரது நண்பனான ஸ்ரீராமன் தேவி ஸீதையைக்காணமல் அலைகின்றார். அந்த ஸீதாதேவியை இங்கு அசோகவனத்தில் கண்டேன். அந்த ஸீதையைத் திருட்டுத்தனமாய் நீர் கொண்டுவந்ததாய் நினைக்கக் காரணமிருக்கிறது. புத்திமான்களான உங்களைப்போலொத்தவர்கள் இப்படிப்பட்ட காரியத்தைச்செய்வது ரொம்பவும் வெட்கக்கேடாயிருக்கிறது ராமலக்ஷ்மணர்களுடைய பாணங்களுக்கு முன்பாக இந்திர சந்திரர்களும் நிற்கமுடியாது. உம்மைப் படாதபாடுபடுத்திய வாலியின் கதி தெரியுமா? ராகவனுல்விட்ட ஒரு பாணத்திற்கு அவன் போறவில்லை. தேவர்களால் உமக்கு பயமில்லாமலிருக்கலாம் சுக்ரீவனுவது ஸ்ரீ ராமனுவது நாங்களாவது தேவர்களில்லை. சுகம்வேண்டுமானல் ஸீதையை எங்கள் ராகவனிடம் ஒப்புவித்து எங்கள் சுக்ரீவனோடு ராஜிபண்ணிக் கொள்ளும், சீக்கிரம் பதில் சொல்லும், எனக்குத் தாமதிக்கச் சாவகாசம் இல்லையென்றார். இதைக்கேட்டுக் கடுமையான கோபங்கொண்ட ராவணன் ஏ தூதர்களே! இந்த துராத்மாவைப் பிடித்து சித்ரவதை செய்யுங்கள் என்றான். சில ராக்ஷஸர்கள் ஆயுதங்களுடன் அனுமானைக் கிட்டினர்கள். ராவணனது சகோதரனான

விபீஷணர் தமையனை வணங்கி, மஹாராஜ! ஸகல வேதசாஸ்திர பாரங்கதரான தங்களுக்கிவ்வளவு கோபம் வரலாமா? தூதர்களை வதம் செய்தலென்கிற அக்கிரமத்தில் தாங்கள் தலையிட்டுக் கொள்ளலாமா? இவன் செய்த அக்கிரமங்களுக்கு எப்படியும் தண்டிக்கலாம். ஆனாலும் தங்களுக்கு இது அழகில்லை. இதற்கு பதிலாகக் கதறக்கதறக் கசையடி அடித்துவிடலாம். அல்லது தலையை ஒட்ட கத்தரித்துவிடலாம். அல்லது அங்கங்களைக் குரூபமாக்கலாம் என்று சொன்னார்.

ராவணன் இதை சரியென்று ஒப்புக்கொண்டு இவனது வாலைக் கொளுத்திவிட்டு இவனை அனுப்பிவிடுங்கள் என்று ஆஜ்ஞாபித்தான். உடனே சில ராக்ஷஸர்கள் ஓடிவந்து ஊரிலுள்ள பஞ்சத்துணிகளை எல்லாம் கொண்டுவந்து வாலில்சுற்றினார்கள். குடம்குடமாய் எண்ணையைவிட்டு அதைக் கொளுத்திவிட்டார்கள். அநுமான் அகப்பட்டுக்கொண்டு விழிப்பவர்போல் சிறிது நேரம் பொறுமையாயிருந்தார். ஊரிலுள்ள ஆபால் கோபாலமான ஜனங்களும் இந்த வானரன் படும்பாட்டை வேடிக்கை பார்க்கவந்தார்கள். ராக்ஷஸ கிங்கரர்கள் தெருத்தெருவாய் இழுத்துக்கொண்டுபோய் இனிமேல் இப்படிச் செய்யாதே, புத்திவந்ததா, வந்ததாவென்று பேரிகளை அடித்துக்கொண்டு கூவிக்கொண்டு சென்றார்கள். சில ராக்ஷஸிகள் ஸீதையினிடத்தில் இதைப்போய்ச் சொன்னார்கள். ஸீதை அநுமானுக்கு ஒரு தொந்திரவுமில்லாமல் ரக்ஷிக்கும்படி அக்கினிபகவானைத் தியானித்தாள். அக்கினிபகவானும் அநுமானுக்குக் குளிர்ச்சியாகவே ஜ்வாலைகளைப் பெருக்கினார். ஸ்ரீ ஸீதாராமர்களுடைய அனுக்கிரஹவஸமே இதென்று அநுமானும் நினைத்தார். ஊர் முழுதும் சுற்றினபின் கோட்டை வெளியில் கொண்டுவந்து விட்டு ஓடிப்போகலாம் என்றார்கள்.

(இன்னும் வரும்)

ப. கே. கல்யாணராம சாஸ்திரிகள்.